தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்டமன்ற மேலவையின் நாற்பத்தி ஏழாவது கூட்டத் தொடர்

செவ்வாய்க்கிழமை, 1974 மார்ச் 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Cultural Shows and Kalai Vizhas

* 211 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have instructed the Madras Police to permit cultural shows and kalai vizhas on small vacant places in residential areas; and

(*b*) if so, the details thereof?

கலைக் கண்காட்சிகளும், கலை விழாக்களும்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) குடியிருப்புப் பகுதிகளில் உள்ள சிறு காலி மனைகளில் கலைக் கண்காட்சிகளையும், கலை விழாக்களையும் நடத்த அனுமதிக்குமாறு சென்னை காவல்துறையினருக்கு அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அவை பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.